**செய்தி வெளியீடு எண்:715** **நாள்: 26.10.2017**

# செய்தி வெளியீடு

## தேசிய வேளாண் அபிவருத்தித் திட்ட கால்நடை மருத்துவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி கருத்தரங்கம்

தேசிய வேளாண் அபிவருத்தித் திட்ட கால்நடை மருத்துவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி கருத்தரங்கம் இன்று (26.10.2017) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தினால் நடத்தப்பட்டது.

இக் கருத்தரங்கத்தில், 17 மாவட்ட ஒன்றியங்களைச் சார்ந்த, 155 தேசிய வேளாண் அபிவருத்தித் திட்ட கால்நடை மருத்துவர்கள் கலந்து கொண்டனர். கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, அரசு முதன்மைச் செயலர், **டாக்டர்.கே.கோபால், இ.ஆ.ப.,** அவர்கள் இக்கருத்தரங்கத்தைத் துவக்கி வைத்து, சிறப்புரையாற்றி, விழா மலரை வெளியிட்டார். சிறப்புரையின்போது, அரசு முதன்மைச் செயலர் டாக்டர்.கே.கோபால், இ.ஆ.ப., அவர்கள், கால்நடை மருத்துவர்களின் கிராமப்புற அளவிலான சேவையை முன்னிலைப்படுத்தி, பால் கொள்முதலை உயர்த்துவதிலும் பால் உற்பத்திச் செலவைக் குறைப்பதிலும் மற்றும் கால்நடைகளின் பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதிலும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்ட கால்நடை மருத்துவர்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இது தவிர, சங்க உறுப்பினர் அளவில் கால்நடைத் தீவனம், தாது உப்புக் கலவை மற்றும் பசுந்தீவனப் பயன்பாடு குறித்த முக்கியத்துவத்தை எடுத்துச் செல்ல அறிவுறுத்தப்பட்டது. பால் உற்பத்திச் செலவை குறைக்கும் முகத்தான், கால்நடைத் தீவனம், தாது உப்புக் கலவை மற்றும் பசுந்தீவனத்தை பயன்படுத்தி அதிக லாபம் பெற உறுப்பினர்களுக்கிடையே எடுத்துச் செல்ல வேண்டுமெனவும், செயல் இழந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை இலாப நோக்கில் செயல்படும் சிறந்த சங்கங்களாக மாற்றிடவும், அமுல்(Amul) போன்று முன்மாதிரி சங்கமாக செயல்பட அறிவுறுத்தினார். அனைத்து கால்நடை மருத்துவர்களும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் ஒத்துழைப்போடு புதிய தகவல் தொழில்நுட்பங்களை சங்க உறுப்பினர்கள் அளவில் எடுத்துச் செல்ல கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும் தரமான பால் உற்பத்தியினை பெருக்கி தனியார் பால் வியாபாரிகளிடம் இருந்து சங்க உறுப்பினர்களைப் பாதுகாத்து அதிக இலாபம் பெறவும், செயற்கைமுறை கருவூட்டல், கால்நடை மருத்துவக் காப்பீடு, தீவனப் புல் கரணைகள் விநியோகம் செய்தல், தூய பால் உற்பத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்திடவும், அரசுத் திட்டங்களை சங்க உறுப்பினர் அளவில் எடுத்துச் சென்று உறுப்பினர்கள் அதிக இலாபம் பெற்றிட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முழுக் கவனம் செலுத்திட அறிவுறுத்தினார்.

இறுதியாக தரமான பால் உபபொருட்களை நுகர்வோருக்கு கிடைக்கவும், புதிய விற்பனை தொழில்நுட்பங்களைச் செயல்படுத்தி உலகத்தர அடிப்படையில் பால் உபபொருட்களை ஏற்றுமதி செய்திட அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநர் **திரு.சி. காமராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் பேசியபோது, பால் கொள்முதல் அளவானது நாளொன்றுக்கு 33.00 இலட்சம் லிட்டர் என்ற அதிகபட்சு அளவை எட்டியுள்ளது என்பதை தெரிவித்ததுடன், பால் கொள்முதல் அளவை உயர்த்தும் வகையில் கால்நடை மருத்துவர்கள் கடினமாக உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், கால்நடைத் தீவனம் மற்றும் தாது உப்புக் கலவையின் பயன்பாட்டினைப் பற்றி வலியுறுத்தினார்.

கிராம பால் உற்பத்தியாளர் சங்க அளவில் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்திடவும், தரமான செயற்கை முறை கருவூட்டல், கால்நடைத் தீவனம், தாது உப்புக் கலவை மற்றும் பசுந்தீவனம் விநியோகம் செய்திடவும், கால்நடை மருத்துவப் பணிகளை சங்க உறுப்பினர்களின் இருப்பிடத்திற்கே சென்று பணி புரியும் முழு ஒத்துழைப்பினை சங்க உறுப்பினர்களுக்கு அனைத்து வகையிலும் வழங்கிடவும், பால் உற்பத்தினை நாளொன்றுக்கு 33.00 இலட்சத்தில் இருந்து 50.00 இலட்சமாக உயர்த்திடவும், செயற்கைமுறை கருவூட்டல் புதிய தொழில்

நுட்பத்தினை கால்நடை ஆராய்ச்சி பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியோரின் ஒத்துழைப்புடன் சங்க உறுப்பினர் அளவில் எடுத்துச் செல்ல அனைத்து கால்நடை மருத்துவர்களும் செவ்வனே பணிபுரியுமாறு கேட்டுக் கொண்டார்.

கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநர் **திருமதி.எஸ். ஜெயந்தி, இ.ஆ.ப.,** அவர்கள், தனது உரையில் கிராமப்புற மக்கள் பயன்படும் வகையில் கால்நடை மருத்துவர்களின் பணி சிறப்பாக நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தினை சங்க உறுப்பினர் அளவில், கால்நடை பராமரிப்புத் துறையின் ஒத்துழைப்போடு எடுத்துச் சென்றதற்கு பாராட்டுதலையும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உரிய தகவல் தொழில்நுட்ப வரைபட முறையினை கிராம அளவில் எடுத்துச் செல்ல முழு ஒத்துழைப்பு வழங்கிட கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS), தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் (NDDB) மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த சிறப்பு வல்லுநர்கள், கால்நடைத் துறை குறித்த முக்கிய விவரங்களை வழங்கினார்கள்.

**துணைப் பால் ஆணையர் (கூட்டுறவு) திரு.உ. சண்முகராஜ்குமார், பொது மேலாளர் (கால்நடை) டாக்டர்.எஸ். ஹரிஹரன்** மற்றும் அலுவலர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**